உ

தேவிசகாயம்.

சகலவியாதிகளுக்கும்

# பிரமமுனியார் அருளிச்செய்த

# மகாசந்தனாதிதயிலம்.

இஃது

## தி-படேமீராசாகிபுபண்டிதர்

அநுபோகத்தின்படி

டாக்டர்சத்திரம்

மகா-ள-ள-ஸ்ரீ

## பி-அண்டியப்பகிராமணியார்

இரும்புலியூர்

## அப்பாதுரைமுதலியார்

இவர்களால்

புங்கத்தூர்

ம-சபாபதிமுதலியாரது

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

துன்மதி ௵ - மாசி மீ.

ஹரி

தேவிசகாயம்.

நன்றாக - குருவாழ்க - குருவே துணை.

சகலவியாதிகளுக்கும்

## பிரமமுனியார் அருளிச்செய்த

# மகாசந்தனாதிதயிலம்.

ஒன்றாஞ்செஞ்சந்தனமோடலம்நாருகும் ............*
உந்துவெட்டிவிலாமிச்சைவில்வம்சங்கம் ... ......*
நன்றான நிலப்பனையும் அமுக்குராவும் ..—..............*
நன்னாரிசாறணைமிளகருணைவரும் ...... ... ......*
கன்றான குருந்தொட்டிபேராமுட்டி... ... ........*
காஞ்சொரிஆதுவெளைகாட்டுமல்லி... ... ... ... ...*
பண்டானதேற்றான்வேர் அத்திப்பட்டை ..... ......*
பருநெல்லிஆயிலியப்பட்டைதானே... .........(க)

பட்டையொடாலம்விழுதுசித்திரமூலம்... .........*
பாலைபாம்பட்டையொடுகுமரிவரும்... ...... ...*
திட்டமாமிருவேலிவட்டத்திருப்பி........ .........*
தென்னமரப்பாளையொடுவிடத்தேர்வீழி.........*
மொட்டலரும்பசுமின்னைகரியசெம்பை... .........*
மூத்தவள்ளிநீர்ப்புலாமுடந்திரிகைவேரும் . ......*
இட்டமுடனேவகைக்குப்பலந்தானைந்து...... .. ...*
இடித்துமண்தாழியிலேயிட்டுக்கேளே.. .....(உ)

சேளப்பா இருதூணிசலந்தான்வாரு................ ... *
கெடியானசந்தனத்தைத்தாழியிட்டு.................*
வேளப்பா இருதூணிசலந்தான்வாரு.................*
வெவ்வேறபடிப்பேற்றிவெட்டான்றுக்கி .....*

நாளப்பாகியாழமிரண்டொன்றாய்ச்சேர்த்து……………*
நலமான நல்லெண்ணெய்ப்படி தானெட்டு…… ……*
ஆளப்பாசெவ்விளநீர்படிநாலும்வெள்……………*
ஆவின்பால்படிநாலும் அதிலேவாரோ……………(௫)

வாரோநீசாறுவகைசொல்லக்கேளு………………………*
வல்லாரைகரிசாலைபொன்னாங்காணி……………*
சேரோநீகற்பூரவள்ளியோடு……………………*
செருப்படையுமுசுமுசுக்கைமணத்தக்காளி ……*
பாரோநீசீதேவிசெங்கழுநீர்ச்சாறு………………*
பருத்திக்காய்நீர்முட்டான் அல்லிகொட்டி……*
வாரோநீநந்தியாவட்டமோடு………………………*
மல்லிகையுஞ்சிறுகீளாசாறுங்கூட்டே……………(௬)

கூட்டடாநீர்மாதளையின்சாறும்…………………*
குமரியுடன்முடக்கத்தான்பற்பாடகம்……………*
நீட்டடாதாழையுடைவிழுதுச்சாறும் ………*
நெல்லிக்காய்ச்சாறுதழுதாழைநொச்சி……………*
ஆட்டடாவெள்ளறுகுபெருநெருஞ்சி……………*
அமிர்தவல்லிச்சீந்தியொடுகாணுவேளை……………*
வாட்டமில்லாஅவுரிபழம்பாசியோடு ……………*
மைந்தனேவகைக்குஅரைப்படிதான்சாறே ………(௭)

சாறேடுகியாழமவையெல்லாமொன்றாய்……… ……*
சாரித்துத்தாளியொன்றில்சாற்றக்கேளு…………*
வாறானதிரிகடுகுதிரிபலாதி…………………………*
வகையானஏலம்இலவங்கங்கோஷ்டம்………………*
வீறானதாளிசைஓமம்இரண்டும்……………………*
விதமானமதுரம்இருசீரகமும்மல்லி………………*
வாறானசாதிக்காய்பத்திரிகிராம்பு………………*
வால்மிளகுசடாமாஞ்சிமஞ்சளாமே………………(௮)

மஞ்சளாஞ்செவ்வியஞ்சோம்புஇந்துடச்சை…………*
வாய்விளங்கங்கூடைநீர்வெங்காளபச்சை…………*
மஞ்சளாங்கிளிபூரல்கருவாய்ப்பட்டை……………*
மாதினிபகுளவிந்தம்பெருங்குரும்பை……………*

மஞ்சளாம்பூலாக்கிழங்குதிப்பிலிமூலம் ... ... ... ... *
மஞ்சிட்டி அத்திதிப்பிலிநாகப்பூ........ ... ... ... *
வஞ்சியேவாலுளுவைகற்கடகச்சிங்கி ................ *
வலம்புரிவெட்பாலைகார்போகிவித்தே ...... ...(௭)

வித்தானவெட்பாலை அரிசியோடு........ ............ *
விளாவரிசிவகைக்குக்கால்பலமேசொன்னோம்..... *
நத்தானஆவின்பால்தனிலாட்டி...... ...... ...... *
நலமானஎண்ணெயிலேகரைத்துவாரு ...... ...... *
சித்தாகஅடுப்பேற்றிமூன்றுநாள்தான்...... ......... *
சிறுகொதியாய்ஆவாரைவிறகால்மூட்டு............ *
முத்தான நாலாம்நாள்கடுந்தீயிட்டு...... ...... ...... *
முருக்கிலுப்பைசண்பகஞ்சம்பங்கிப்பூவே......(௮)

பூவொடுபன்னீரும்மாதளையும்முல்லை... ...... ...... *
புங்கொடுகோங்கிலவுபால்குறண்டிப்பூவும்... ... ... *
பூவொடொருதிமிருபிடிவகைக்குச்சொன்னோம் ... *
பொன்னுனமருக்கொழுந்துபிடிதான்போடு..... *
பூவெட்டிவையாவையுமேம்பாட்டுக்கிண்டிப்...... ... *
பொங்காமல்மெழுகுபதம்வருதல்கண்டு... ... ... *
காவொடுகையிட்டுமேகிண்டிப்பாரு...... ........... *
கடுகுருண்டுமெழுகானால்அடுப்பையாற்றே ... (௯)

ஆற்றவேவடிக்கலசந்தன்னிலேகேள்.................. *
அணிகுங்குமப்பூகோரோசனைகஸ்தூரி . ... ...... *
பார்த்துமேசாதிக்காய்செங்கழுநீர்கோஷ்டம் ... ... *
பச்சைகற்பூரமொடுபுனுகுதானும்... ...... ...... *
போற்றியேவகைக்குநாற்கழஞ்சிகொண்டு............ *
போத்துமேவடிக்கலசத்துள்ளேயிட்டு...... ...... *
ஆற்றியேதயிலத்தைவடித்துவாங்கி........ ........ *
ஐங்கரற்கும்அறுமுகற்கும்* பூசைபண்ணே ... (௰)

* பூஜாவிதி

வைக்குந்தயிலந்தனைப்பார்த்துவடி கொள்மெழுகுபதத்திறக்கிக்
கைக்குஞ்சரனைகந்தனைவான்கவனநவநாதர்கள்தப்பமை
உய்க்குஞ்சுழினைநடம்புரியுமுமையாதிருவாணியைப்பூசை
மெய்க்கும்விதியாற்பொரிகடலைவீறுபழம்தேங்காயொடுமே

காயாக்கரும்புஞ்சருக்கரையுங்கனிவாய்ப்பிளவும்வெற்றிலையும் *
ஆயாப்பூவுந்தக்ஷிணையும்ஆதிபகவற்கவேசெய்து............*
ஓபாக்குணமாமந்திரநூற்றுருவேசெபித்துஓமென்று ...... ...*
மேபாகமத்தின்விதிப்படியேமெய்ம்மையறிந்துபூஜைபண்ணே

3 பண்ணியேதயிலத்தைத்தானியபுடமிட்டு...... ......*
பக்குவமாய்நாலுநாள்வட்டம்மூழ்கு................*
நண்ணியேபசும்பயறுஞ்சீய்க்காயாகும்......... ...*
நலமாகமூழ்குநாள்புளியைத்தள்ளு................*
பண்ணையையுமொழிபாலேபுகையிலேடு............*
பாலதயிரும்பச்சைசமாமிசமாகாது... .........*
திண்ணமாய்ப்பெண்ணேறுபலகாரங்கள்............ *
சேரவொன்றுமாகாதுதெரிந்துதள்ளே...... (௰௩)

பழங்கள் பூசினிக்காய் உளுந்து மொச்சை அரைக்கீரை குளிர்ந்தசலம் ஆகாது.

3 பத்தியம்.

மூழ்கிவரமண்டலத்தில்நோய்கள்தீரும்................*
முன்பின்இதும்போலிலைதயிலப்போக்கு...... ...*
வாழ்குவாய்வேதாந்தம்சித்தாந்தம்ரெண்டும்... .......*
வளமானகிரந்தமுதல்தமிழும்பார்த்து... .. ......*
ஆள்குவாய்ஆயிரத்திருநூறுக்கும்.......... ... ......*
அப்பனேசூத்திரம்அறுநூற்றில்சொன்னேன் ... *
தாழ்வுதான்வாராதுசஞ்சீவியாகும்...... ...... .....*
தகைமையுள்ளபத்தியந்தான்சாற்றக்கேளே ...... *

ஆகாதுதள்ளிவிட்டருந்தக்கேளு......................*
அவரைக்காய்சிறுகீரைமுருங்கைப்பிஞ்சு............*
பாகானசிறுபயறுதுவரைநெய்யாம்...................*
படர்கொடிக்கால்வழுதலையின்பிஞ்சுமாகும் ... *
வாகானகோழிஅண்டம்உடும்புகாடை...... .........*
வயல்பயறும்சுடுமீனுமாகும்சொன்னேன்..........*
சாகாதகொழுத்தஇரையாங்கவுதாரி........... ......*
சருக்கரையும்முசல்ஆகும்மிளகும்ஆமே ..........*

பிளகாகுஞ்சிரகமாங்கருவாய்ப்பட்டை ... *
வெத்தயமாம்சாதிக்காய்ஏலமாகும் ... *
பிளகாகும்வெற்றிலையும்கிராம்புமாகும் ... *
பின்னையொன்றுமாகாதுசொல்லக்கேளு, ... *
அளகானதிவ்வளவும்கூட்டிக்கொண்டு ... *
அப்பனேபுலத்தியனேஅருமையாளா ... *
பளகாகும்தயில்மத்துமூழ்க்கும்போது ... *
பருமாத்தம்வெந்நீர்பருகுவாயே ... *

௦ தள்ளிமறுநாள்கூட்டுதீரும்வியாதி ... *
சாற்றக்கேளாய்தலைநோய்தொண்ணூற்றாறும் ... *
கொள்ளவேசயகாசம்பதினெண்குலை ... *
குலையெரிவோடஷ்டகுன்மமயக்கத்தூக்கம் ... *
வள்ளமேல்மேகமென்றதிருபத்தொன்றும் ... *
வாதபித்தசிலேத்துமத்தால்வந்தநோயும் ... *
மெள்ளவேஅஸ்திசுரம்அஸ்திவெட்டை ... *
முறைகாச்சல்கண்ணெரிவுவிட்டுப்போமே .. .. (௰௨)

போமேதான்சிரங்குசொரிகரப்பான்குஷ்டம் ... *
பொங்கிவருநீரிழிவுவலிகடுப்பு ... *
போமேதானச்சுவலிமண்டைகுத்தல் ... *
பொறிகலங்கும்திமிரோடுவாயுவெல்லாம் ... *
போமேதான்கண்ணோய்கள்தொண்ணூற்றாறும் ... *
போக்கரியபற்பலசண்டாளரோகம் ... *
போமென்றேசொல்லிவிட்டேன்சந்தனாதி ... *
புண்ணியஞ்செய்தவர்களிதைப்போற்றுவாரே. (௰௩)

௦ தீரும்வியாதிகள்.

குற்றங்கள்வாராமல்தயிலமூழ்க ... *
குணங்கேட்கும்பண்டிதனேகூறக்கேளு ... *
பத்தியமாய்நாலுநாள்வட்டம்மூழ்கு ... *
பசும்பயறுஞ்சியக்காயும்வெந்நீராகும் ... *
வெற்றிபடாதீரும்நோய்சொல்லக்கேளு ... *
மேகவெள்ளையிருபத்துந்தானெங்கேபோச்சு ... *
சத்தியமாய்அஸ்திசுரம்அஸ்திவெட்டை ... *
தழங்கியமெய்யெரிவுகைகால்காந்தல்போமே ... *

சாந்தமொடுபித்தவாய்வூட்டினவர்ப்போடு...... ......*
கண்ணெரிவுகிறுகிறுப்புமயக்கம்தூக்கம்... ......*
வாந்திவாய்நீரூறல்மண்டைசூலை............ ......*
வறட்சியொடுகாமாலைபாண்டுசோகை... .........*
மூந்திவருமண்டையிடிமண்டைக்குத்து...... ... ..*
மூக்கில்நீர்ப்பாய்ச்சலொடுபீனிசங்கள்...... ......*
சூந்தியாம்கண்ணோவுகண்புகைச்சல்...... ... .........*
காலசதியையசதிசூலைவாய்வே ....... ..............*

வாய்வோடுசூலையெரிவுநீர்ச்சுருக்கு............ ......*
வாதபித்தசிலேற்பனத்தால்எடுத்தரோகம்... ......*
ஏயுமற்றையுள்ளநோய்வகைகளெல்லாம்..............*
இடிவிழுந்தபனைபோலஏங்கிப்போகும்...... ... *
காயாதுகண்ணொளியோகுளிர்ச்சியாகும் ..... ......*
கண்புகைச்சல்வெள்ளெழுத்துமாறிப்போகும் ...*
பாய்கின்றஅலைகடல்சூழ்உலகத்துள்ள... ..........*
பற்பலவாகியநோய்கள்பறக்கும்பாரே...... ......*

○ பறக்குமடாமேகமிருபத்துநாலும்...... ... ..*
பகிவிருந்தமூலமுதல்பவுத்திரவாய்வும்..... ......*
அறக்குமடாகண்வாய்வுஅஸ்திமேகம்............ ...*
அதிசாரக்கிறிச்சினம்பீனிசம்நீர்மாற்றம்..........*
துறக்குமடாகெட்டகண்ணுங்கபாலவாய்வும் ... ... ..*
சூலையம்மந்தாரகாசமெட்டும்........ ... ... ..*
நிறக்குமடாவெளுத்திருந்தவுடலிரத்தம்...... ... ...*
நிறைபித்தச்சோகையொடுநீங்கும்பாரே.............*

## தயிலத்தின் அருமைபெருமை

கனகமொப்பாச்சரீரநிறங்காட்டுமேகராஜாங்கம்... ..... .. ...*
எனலாந்தயிலமெலாதினவ்வாந்நீர்க்குஞ்சந்தனாதி...............*
வினலாம்விளக்கும்விஷமுட்டிவிண்டோம்நாலுதயிலம்அதில் *
அனலைபாத்துஞ்சந்தனாதிஅருமையுணாக்கஆர்வசமே... ... ..*

சிலகுறியீடுகளிட்டு 'அ'டியிலெழுதியிருக்கும் பாடல்களெல்லாம் வேறுசாஸ்திரங்களிலுள்ளவைகளென்று அறிக.

உ

# அறிக்கை.

---

இந்தமகாசந்தனாதிதயிலம் பாகஞ்செய்து நிறைவேறியிருக்கிறபடியால் அரைபடி தயிலம்பிடித்த இங்கிலீசுபாட்டில்-க-இ-ரூபா-ய - ஆகவும் கால்படிபிடித்த பயின்ற்று-க-இ-ரூபா-ரு - ஆகவும் சென்னபட்டணம் வடமலைமேஸ்திரியார்வீதி-உக - வது-கதவிலக்கமுள்ள வையாவூர்-அருணாசலமுதலியார்கிருகத்திலிருக்கும்-இ.பண்டிதர் அப்பாதுரைமுதலியார் மூலமாகவிலைகொடுத்து வேண்டியவர்கள் வாங்கிக்கொள்ளலாம்.

தயிலம்வாங்கிக்கொள்ளப்பட்டவர்களுக்குப் பத்தியம்முதலியவிபரம் அறிந்துகொள்ளும்பொருட்டு, இப்புத்தகம் ஒன்று விலையில்லாமல்கொடுக்கப்படும்.

இங்ஙனம்,

பண்டிதர்கள்.

டாக்கர்சத்திரம் பி.ஆண்டியப்பகிராமணியார்.

தி. படேமீராசாகிபு.

இரும்புலியூர் - நாராயணசாமிமுதலியார்.

இங்கிலீஷ் டாக்டர்

திருவிளம்பூதூர் - அண்ணாமலைமுதலியார்.

# நெல்லிக்காகிர்தமுற்பா.

சகலருக்கும் முழுநெல்லிக்காயாகச் சாப்பிடத்தக்க அவி ழ்தம் இதுகுணஞ்செய்யப்பட்ட விவரம் பித்தமென்பதுநாற் பதும் தணித்த இரத்தமூலச்சூடும் நீர்ச்சுருக்கு நீரருகல் கொதி ப்பு வெப்பு அழலை ஆக்கிருஷீம் கைகால்நடுக்கல் இவைகளெல் லாந்தணிக்கும்.

பித்தமனலையப்பீநசம்வாய்நீர்வாந்தி.................................*
மத்தமலக்கட்டும்மயக்கமுமில்—ஒத்தவுரு............... ........*
வில்லிக்காயம்மருங்காமெற்நாட்காலந்தேர்ந்தே...... ..........*
நெல்லிக்காயம்மருந்துநீயுண்.............. ... .......... .........*

உருவில்லிக்காயம்மருங்காம்- மன்மதன் சரீரத்தினுடைய அழகுண்டாம் எந்நாட்காலம - பகற்காலத்தை-தேர்ந்து - அறிந் து-நெல்லிக்காய்-நெல்லிக்காயாகிய மருந்து அமுர்தத்தை -உண் நீ-உண்ணு.

நெல்லிக்காய்க்குப்பித்தம்நீங்குமதன்புளிப்பால்...............*
செல்லுமேவாதமதிற்சேர்துவரால்—சொல்லும்ஐயம்... ... ...*
ஓடுமினைதச்சித்தத்தில்உன்னஅனலுடனே......... ..............*
கூடுபிறமேகமும்போங்கூறு............... ..........................*

பத்தியம்.

கடுகு-நல்லெண்ணெய்-புகையிலை-சுருட்டு -இவைநீக்கவே ண்டியது.

நெல்லிக்காய் ஆமலகம் பாகஞ்செய்து நிறைவேறியிருக்கி ன்றது இதுகளில் பெரியகாய் -ரூபா-கஇ கூஉ-ஆ-ம்-சிறிய காய் - ரூபா-கஇ கூச ஆ-ம்-வேண்டியவர்களுக்குக் கொடுக்க ப்படும்.

உ

# திருகரணபுராதிசுத்தி பரங்கிப்பட்டை ரசாயனம்

---

இது குணஞ்செய்யத்தக்கவிவரம் ஆனந்தவாய்வு தாதுவிர்த்தி உபித்தவாய்வு-பிடிப்புசூலைவாய்வென்பது இருபத்தாறும் மேகம் இருபதும் கருங்கிரந்தி-செங்கிரந்தி சூலைபதினெட்டும் வீதம்ள ண்பத்துனாலும் ஒட்டியசிரங்கும் அறும் ஓது.

தாகம்பல்வாதந்தாதுநஷ்டம்புண்பிளவை...................*
மேகங்கட்டிகிரந்திவிழ்மூலந்...தேகமுடங் ....................*
குட்டைபகந்தரமேற்கொள்வமனம்போம்பறங்கிப்...............*
பட்டையிணைபுச்சரித்துநீரிழிவுபோம்பார்......................*

திருகரணபுராதிசுத்தி பறங்கிப்பட்டை ரசாயனம்காலையில் பலம்-ஹ-மாலையில்-பலம்-ஹ பிரமாணம் ஒருமண்டலம் சாப்பிடவேண்டியது ஸ்நானம் க்ஷவரம்செய்துகொள்ளுகிறதினத்தில் மருந்துநீக்கவேண்டும் இதல்லாமல் பெண் நீக்கவேண்டியது சாப்பிடுகிறவஸ்துவில் யாதொருபத்தியமில்லை தனக்கிஷ்டமான பதார்த்தங்கள் சாப்பிடலாம் இதுசேர்-க-இ-ரூபா ௫-ஆ கொடுக்கப்படும். இது சகலருக்கும் உபயோகமாகும்.

## சுப்பிரமணியர் துணை.

---

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் டாக்கர் சத்திரத்தில் மகாகனம்பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ. பண்டிதர் பி. ஆண்டியப்பகிராமணி என்பவர் சிறுகுழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் சகலவிதமான வியாதியிருந்தபோதிலும் அவர்பார்க்கவல்லவர் யாவருக்கும்நல்லவர் கைபாகம் செய்பாகம் தெரிந்தவர் வயித்தியஞ்செவ்வையாய்அறிந்தவர் அப்படிய பட்டபுண்ணியவானல் அனேகருக்குச் சகலவிதமான வியாதிகளும்சொஸ்தமாயிருக்கின்றது வியாதியுள்ளவர்கள் அந்த புண்ணியஆத்மாவைக்கண்டு தங்கள் தங்கள் வியாதிகளைச்சொஸ்தப்படுத்திக் கொள்ளலாம்.